1984 மார்ச் 29]

சளையும், உப்பையும குறைவாக உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது உடல் நலத்திற்காக சொல்லப்பட்டிருக்கிற ஒன்று. ஆகவே பயன்படுத்துவதில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

களிமங்கலத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்.

507 —(*வினா எண். 19875) —திரு ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள களிமங்கலத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பகுதி அதிகமான விவசாயிகள் இருக்கிற ஒரு பகுதியாக இருக்கிறது. அங்கே அதிகமான கால்நடைகள் இருப்பதால் கால்நடை மருந்தகம் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை கிழக்கு ஒன்றியத்திலுள்ள களிமங்கலத்தில் ஒரு செயற்கை முறை இனவிருத்தி நிலையம் இயங்கி வருவதாலும், களிமங்கலத்திற்கு அருகில் உள்ள வரிச்சூர், ஒத்தக்கடை முதலிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருவதாலும் களிமங்கலத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்திய கூறுகள் இல்லை. களிமங்கலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 4,450 தான். ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்றால் சுமார் 20 ஆயிரம் கால்நடைகள் அதைச் சுற்றியுள்ள பகுதியிலே இருக்கவேண்டும். அப்போதுதான் கால்நடை மருந்தகத்தை அங்கே அமைக்கமுடியும். இந்தக் களிமங்கலத்தைச் சுற்றி இருக்கிற கிராமங்களில் 4,450 கால்நடைகள்தான் இருக்கின்றன. ஆகவே இங்கே அதை அமைப்பதற்கான உத்தேசம் இப்போது இல்லை.